செ.வெ. எண்: 139 நாள்: 21.02.2012

**<u>வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவு விவரங்கள் சரிபார்த்துக் கொள்ள வேண்டுகோள்.</u>**

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் மேற்கொள்ளப்படும் புதிய பதிவு, புதுப்பித்தல், கூடுதல் கல்வித் தகுதி பதிவு செய்தல் போன்ற பணிகள் அனைத்தும் தற்போது இணையதளம் வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதற்கான இணையதளம் முகவரி **{** HYPERLINK "http://tnvelaivaaippu.gov.in" **}** ஆகும். வேலைவாய்ப்பு அலுவலகங்களில் முன்பே பதிவு செய்து அடையாள அட்டை பெற்றுள்ளவர்கள், புதுப்பித்தல் மற்றும் கூடுதல் கல்வித் தகுதியைப் பதிவு செய்வதுடன் மட்டுமல்லாமல், தங்களின் பதிவு விவரங்களையும் இணையதளம் வாயிலாகச் சரிபார்த்துக் கொள்ளலாம். பதிவுதாரர்கள் தங்களின் பதிவு விவரங்களில் ஏதேனும் திருத்தம் தேவை இருப்பின் அதனைச் சரிசெய்து கொள்ள உரிய சான்றுகளுடன் தாங்கள் பதிவு செய்துள்ள வேலைவாய்ப்பு அலுலகத்தை ஏதேனும் ஒரு வேலைநாளில் அணுகி, தங்கள் பதிவு விவரங்களைச் சரிசெய்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**